# தமிழில் முறைப்பெயர்களும் அவைதிணைபால் உணர்த்தும் முறைமையும்

இரகுபரன், க*

**ஆய்வுச் சுருக்கம்**

முறைப்பெயர்கள் என்பன உறவு முறை காட்டும் பெயர்ச் சொற்கள். சமூக வாழ்வில் முறைப்பெயர்கள் இன்றி அமையாதவை. எனவே, எந்த மொழியிலும் முறைப்பெயர்கள் மிக முக்கியமானவை. முறைப்பெயர்களின் எண்ணிக்கை, பொருள், பயன்பாட்டு முறை, அமைப்பு என்பன மொழிக்கு மொழி வேறுபடுகின்றன. ஒரே மொழியைப் பேசுவோர் மத்தியிலும் முறைப் பெயர்கள் வேறுபடுதுண்டு. இலங்கையில் தமிழர் கையாளும் முறைப் பெயர்களுள் ஒரு சிலவற்றைத் தவிர அனைத்துமே தமிழ்நாட்டு வழக்கில் உண்டு. யாழ்ப்பாணத்து வழக்கு என நூற்றுக்கணக்கான சொற்களைத் தரும் பேரகராதி யாழ்ப்பாணத்திலும் இலங்கையில் தமிழர் வாழும் ஏனைய சில பகுதிகளிலும் பெருவழக்கிலுள்ள கொப்பன், கொய்யா, கொப்பா, கொப்பு, கொம்மா, கோத்தை, கோச்சி, கொக்கா, கொண்ணை, கொண்ணன், கொம்மன், கொத்தான் ஆகிய முன்னிலை வழக்குடைய முறைப் பெயர்களைத் தரவில்லை. இவை முறையே அப்பன், அய்யா, அப்பா, அப்பு, அம்மா, ஆத்தை, ஆச்சி, அக்கா, அண்ணை, அண்ணன், அம்மான், அத்தான் ஆகிய சொற்களை அடிப்படையாகக் கொண்டவை. முன்னிலை வழக்குடைய இவ்வுறவுப் பெயர்கள் இலங்கையில் நீண்டகாலமாக சமூக வாழ்வில் அன்றாட வழக்கில் இருந்து வருகின்றன. இவ்வுறவுப் பெயர்கள் இலங்கியங்களிலோ அகராதிகளிலோ இடம்பெறாத போதிலும், அவற்றை மிகப் பழைமையானவை எனக் கொள்ளலாம் போலத் தோன்றுகின்றது. இவ்வுறவுப் பெயர்களில் பண்டைய இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள சில உறவுப் பெயர்களின் அமைப்பு முறையைக் காண முடிகிறது. கொ அல்லது கோ சொல்லின் முதல்நிலையில் இடம்பெற்று, ‘‘உன்’’ என்னும் பொருளை உணர்த்துவது புதுமை. தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களுக்கும் தனித் தனியேயுரிய உறவுப் பெயர்கள் பண்டைய இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. நாம் அறிந்த ஏனைய தமிழ்க் கிளைமொழிகளைக் காட்டிலும் யாழ்ப்பாணத் தமிழிலேதான் முன்னிலை உறவுப் பெயர்கள் எண்ணிக்கையில் அதிகமாக உள்ளன. இவை இங்கு பெருவழக்குடையன மட்டுமன்றி சீரான ஓர் அமைப்பையும் பெற்றுள்ளன. சமுதாயத்தில் மக்கள் தமக்குள் உறவுகொள்ளும் முறைக்கேற்ப உறவுப் பெயர்களும் அவற்றின் எண்ணிக்கையும் பொருளும் அமைப்பும் மொழிக்கு மொழி வேறுபடுகின்றன. இவ்வாறு வேறுபட்டு அமையினும் சில இயல்புகளில் தனி ஒப்புமை இருப்பதும் உண்டு. இவ்வேறுபாடு பொதுவாகப் பண்பாட்டு வேறுபாட்டினால் தோன்றுகிறது எனலாம். ஒப்புமைக்குக் காரணம் அம்மொழி பேசுவோரிடமுள்ள ஒருமைப்பாடு ஆகலாம். இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் பிராந்தியங்கள் தோறும் சில விசேட உறவுப் பெயர்கள் வழங்குகின்றன. குறித்த சமூகங்கள் மத்தியிலும் அத்தகைய நிலை காணப்படுகின்றது. உதாரணமாக தமிழ்நாட்டுப் பிராமண சமூகத்தில் சில விசேடமான உறவுப் பெயர்கள் நிலவுகின்றன. தமிழ் பேசும் முஸ்லிம்கள் மத்தியிலும் அத்தகைய நிலை உண்டு. அவ்வுறவுப் பெயர்கள் யாவும் ஆண்பால் சார்ந்தும் பெண்பால் சார்ந்தும் வேறுபடுகின்றன. வெவ்வேறு வடிவங்களைப் பெறுகின்றன. இவற்றையெல்லாம் ஆராய்ந்து பிராந்திய, சமூக நிலைகளில் வழங்கும் உறவுப் பெயர்களுக்கு இடையிலான ஒற்றுமை, வேற்றுமைகளை வெளிக்கொணர்வதாகவும் அவற்றுக்கான காரணங்களைக் காண முனைவதாகவும் இந்த ஆய்வு அமையும்.

**பிரதான சொற்கள்:** முறைப்பெயர், திணை, பால், இலங்கை, தமிழ்நாடு, முஸ்லிம்கள்

To whom correspondence should be addressed: kanagasabai.raguparan1@gmail.com

* Senior Lecturer, Department of Languages, South Eastern University of Sri Lanka.